Tamil | தமிழ்
மே மாதம் 2016

# விக்டோரிய மாநிலத்திலுள்ள அகதிகள் மற்றும் புகலிடம் நாடுவோர் போட்டுக்கொள்ள வேண்டிய தவறவிட்ட தடுப்பூசிகள்

## தவறவிட்ட தடுப்பூசிகளை நான் ஏன் போட்டுக்கொள்ளவேண்டும்?

பாரிய நோய்த்தாக்குதல்கள் மற்றும் சில வகைப் புற்றுநோய்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் சில தடுப்பூசிகள் (நோய்த் தடுப்பு ஊசிமருந்துகள்) அனைவருக்கும் பரிந்துரைக்கப்படுகின்றன.

அகதிகள் மற்றும் புகலிடம் நாடுவோர் அவுஸ்திரேலியாவிற்கு வந்து சேரும்போது தவறவிட்ட தடுப்பூசிகளை அவர்கள் போட்டுக்கொள்ள வேண்டும். இது ஏன் என்றால், அவர்களது சொந்த நாடுகளில் உள்ள தடுப்பூசிகள் வேறு விதமானவையாகும். 'தவற விடப்பட்ட' தடுப்பூசிகள் ஆவன, அவுஸ்திரேலியாவில் பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசிகள் யாவும் மக்களுக்குப் போடப்பட்டுவிட்டன என்பதாகும்.
தடுப்பூசிகள் குழந்தைப் பருவத்தில் கொடுக்கப்பட்டாலும், இளையவர்களும், வயதுவந்தோருக்கும் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே வாழ்ந்த பொழுது தடுப்பூசிகளைப் பெறத் தவறியிருந்தால், தடுப்பூசிகளை வழங்குவது மிக முக்கியமாகும். 'தவற விடப்பட்ட' தடுப்பூசிகளை முழுதாக நிறைவு செய்துவிட்டால், பிற்பாடு மீண்டும் செய்ய வேண்டிய தேவை இல்லை.

உங்களது மருத்துவரோ அல்லது தாதியோ மேலும் சில தடுப்பூசிகளைக், குறிப்பாகக் காய்ச்சலுக்கான தடுப்பூசிகளைப் பரிந்துரை செய்யக் கூடும். காய்ச்சலுக்கான தடுப்பூசிகள் 'தவற விட்ட' தடுப்பூசிகளின் ஒரு பகுதி அல்ல.

## இதற்கு நான் பணம் செலுத்த வேண்டுமா?

அகதிகள் மற்றும் புகலிடம் நாடுவோர் அனைவருக்கும் தடுப்பூசிகள் இலவசமாகும்.



## தடுப்பூசிகள் பாதுகாப்பானவையா?

அவுஸ்திரேலியத் தடுப்பூசிகள் ஊக்கமாக வேலை செய்யும் என்றும் அவை பாதுகாப்பானவை என்றும் ஆய்வுகள் காண்பிக்கின்றன. நீங்கள் ஏற்கனவே தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டிருந்தாலும், அவற்றை மீண்டும் போட்டுக்கொள்வது பாதுகாப்பானதே. ஊசி போடப்பட்ட பின்பு, காய்ச்சல் அல்லது வலி தோன்றுவது பொதுவானது. இதனால் எதுவிதப் பிரச்சினைகளும் ஏற்படாது. அத்துடன் 1-2 நாட்கள் மட்டுமே காணப்படும். கடும் பக்க விளைவுகள் மிக அரிது.

## தவறவிட்ட தடுப்பூசிகளை நான் எங்கு போட்டுக்கொள்ளலாம்?

- உங்கள் குடும்ப மருத்துவர் (அனைத்து வயதினருக்கும்)
- உள்ளூர் நகரசபை (18 வயதிற்குக் கீழ்ப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும்)
- மொழிக் கல்விப் பாடசாலைகள் (இதற்கான திட்டங்கள் இருந்தால்)
- The Asylum Seeker Resource Centre (புகலிடம் நாடுவோர் மூலவள மையத்தில்) (வயதுவந்தோருக்கு)

## எனது சந்திப்பு வேளையின் போது மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் எனக்குக் கிடைப்பாரா?

ஆம் - உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேட்பது சரியே (மற்றும் இது முக்கியமானது).

## தவறவிட்ட தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ளும்போது என்ன நடக்கும்?

இத் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வதற்கு 4 மாத கால நீட்சியில் உங்களுக்கு 3 அல்லது 4 சந்திப்புவேளைகள் தேவைப்படும். தடுப்பு மருந்துகள் பொதுவாக ஊசி மூலம் ஏற்றப்படும், மற்றும் ஒரு ஊசிமருந்தானது பல நோய்களிலிருந்து உங்களுக்குப் பாதுகாப்பளிக்கக்கூடும். ஒவ்வொரு சந்திப்புவேளையின் போதும் 2 – 3 ஊசிகள் போடப்படும். Australian Immunisation Register (அவுஸ்திரேலியத் தடுப்பூசிப் பதிவேடு) எனும் பதிவில் மேற்கொண்டு போட்டுக்கொள்ளப்படும் தடுப்பூசிகள் பதிவு செய்யப்படும். இந்த

# விக்டோரிய மாநிலத்திலுள்ள அகதிகள் மற்றும் புகலிடம் நாடுவோர் போட்டுக்கொள்ள வேண்டிய **தவறவிட்ட தடுப்பூசிகள்**

சந்திப்புவேளைகளின்போது, தடுப்பூசி போட்டுக்கொள்பவர் சுகவீனமுற்றிருக்கிறாரா என்றும், அவர்கள் வேறு தடுப்பூசிகளைப் போட்டுக் கொண்டுள்ளார்களா என்றும், எப்போது அவற்றைப் போட்டுக்கொண்டார்கள் என்றும், தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ளும்போது அவர்களுக்கு எப்போதாவது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளனவா என்றும் கேட்கப்படும். தடுப்பூசி ஏற்றப்பட்ட பிறகு சுரம் அல்லது நோவு ஏற்படுவது பொதுவானது, ஆனால் இதனால் பிரச்சினை எதுவும் ஏற்படாது, மற்றும் இது 1 – 2 நாட்களுக்கு மட்டுமே நீடிக்கும். பாரிய பக்க விளைவுகள் ஏற்படுவது மிகவும் அரிது.



## சந்திப்புவேளைகளுக்கு நான் என்னென்ன கொண்டுவர வேண்டும்?

நீங்களோ, உங்களது குழந்தையோ ஏற்கனவே போடுக்கொண்ட தடுப்பூசிகளின் காகித(எழுத்து மூல)ப் பதிவு இருந்தால், ஒவ்வொரு சந்திப்புவேளையின் போதும் அதை உடன் எடுத்து வாருங்கள். உங்கள் மொழியில் உள்ள பதிவுகளை எடுத்து வந்தாலும் பரவாயில்லை. உங்களுக்குத் தேவைப்படும் தடுப்பூசிகள் யாவை என்பதை முடிவு செய்யவும், வெளிநாட்டில் நீங்கள் போட்டுக்கொண்ட தடுப்பூசிகளை Australian Immunisation Register -இல் பதிவு செய்யவும் மருத்துவர் அல்லது தாதிக்கு இது உதவியாக இருக்கும். தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள நீங்கள் வெவ்வேறு இடங்களுக்குப் போவது சரியே, ஆனால் ஒவ்வொரு முறையும் நீங்கள் உங்களது பதிவுகளை உடன் எடுத்துச் செல்லவேண்டும்.




உதாரணத்திற்கு ஒரு வெளிநாட்டுத் தடுப்பூசிப் பதிவு

## தவறவிட்ட தட்டுப்பூசிகளை நான் போடாவிட்டால் என்ன ஆகும்?

தடுப்பூசிகள் நோய்களைத் தடுத்து உடல் நலத்தைக் காக்கும் - எனவே, தவறவிட்ட தடுப்பூசிகளைப் போடாவிட்டால் நோயால் பாதிக்கப் படலாம்.

அவுஸ்திரேலியாவில் தடுப்பூசிகள் மற்றும் Centrelink குடும்ப உதவிக் கொடுப்பனவு தொடர்பாகச் சில புதிய விதிகள் உள்ளன. குழந்தைகள் மற்றும் 20 வயதுக்குட்பட்ட இளையவர்களின் விவரங்கள் Australian Immunisation Register, காணப்படாவிட்டால், அவர்களுடைய Family Tax Benefit Part A-supplement, இணைப்பு, குழந்தைப் பராமரிப்புக் கழிவு அல்லது குழந்தைப் பராமரிப்பு உதவி என்பன கிடைக்கப்பட மாட்டாது. தவறவிட்ட தடுப்பூசிகளைப் போடுவதினால், இச் சலுகைகளைக் குடும்பங்கள் பெறலாம். பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு தடுப்பூசிகளைப் போடுவதையிட்டு இந்நிலையிலும் முடிவெடுக்கலாம். ஆனால் தமது குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடாதிருக்க முடிவெடுத்தால், குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளைப் பெற மாட்டார்கள்.

விக்டோரியாவிலுள்ள சில விதிமுறைகளுக்கமைய, சகல குழந்தைகளும் தமது தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள வேண்டும் அல்லது தவறவிட்ட தடுப்பூசிகளைப் பின்வரும் இடங்களில் போடுவதற்குத் திட்டங்கள் இருக்க வேண்டும். குழந்தைப் பராமரிப்பு (பாலர் வகுப்பு, நீண்ட நேரப் பராமரிப்பு, சில சமயப் பராமரிப்பு மற்றும் குடும்ப முழு நேரப் பராமரிப்பு). இந்த விதி முறை பாடசாலையையோ அல்லது பாடசாலைக்குப் பின்னரான பராமரிப்பைப் பாதிக்காது

